# கவிப்பேரரசு கவிதைகள் காட்டும் சமூகச் சிக்கல்கள்

*முனைவர் ச. கந்தன்*
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை

மலர்: 12
சிறப்பிதழ்: 1
மாதம்: மே
வருடம்: 2025
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI: https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8988

## முன்னுரை

பல்வேறு நீதி நூல்கள் அறக்கருத்துக்களை வலியுறுத்திய போதிலும், ஒவ்வொரு தனிமனிதனும் அறநெறிகளைப் பின்பற்றி வாழ்வதில்லை. எனவே சமூகத்தில் முறைகேடான பல்வேறு நிகழ்வுகள் வரைமுறை தாண்டி நிகழ்கின்றன. இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக பல்வேறு இலக்கியங்கள் எழுதப்பட்டாலும் நடைமுறை வாழ்விற்கு அவை ஏற்புடையதாய் அமைவதில்லை. எனவே சமுதாயச் சிக்கலை முன்நிறுத்தி பல அறிஞர்களும் எழுதி வருகின்றனர். அவ்வகையில் வைரமுத்துவின் புதுக்கவிதைகள் முன்மொழிகின்ற சமுதாய சிக்கல்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## சமுதாயம் - சொற்பொருள் விளக்கம்

சமுதாயம் என்னும் சொல்லுக்கு வாழ்வியற் களஞ்சியம். “ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி” சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்று கூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும்” (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி, 8-ப.459) என்கிறது.

## வைரமுத்துவின் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்

பழங்காலத்தொட்டே சாதி என்னும் அமைப்பு முறை இருந்து வருகிறது. மனிதன் தான் முந்தியில ஏந்திக்கிட்டு குடிசைக்கு நான் போனாக் குடிதண்ணீர் இருக்காது என் வீட்டு அடுப்பெரிக்க எனக்கு விறகிருக்காது (இ.பு.வி.ப. 23) என்று விறகு விற்பவள் கூறுவதாக அமைந்துள்ள கவிதை வரிகளில் அவளுடைய வறுமை புலப்படுகிறது.

## வறுமைக்குக் காரணம்

தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாமல் வறுமையில் வாடுகின்றனர். தொழிலாளிகள் கடின உழைப்பால் முதலாளிகளுக்கு உதவியாக அமைகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு எவ்வித பயனும் விளைவதில்லை. இக்கருத்தினை,

இன்றைய விருந்து மண்டபத்தில்

***பரிமா றுகிறவனுக்கோ***
***பட்டினிச் சாவு***

***(தி.எ.தீ.ப.54)***

என்ற வரிகள் விளக்கி நிற்கின்றன. மனிதனுக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடமாகும். மக்களுக்கு இவற்றை அளிக்க வேண்டியது அரசினுடைய பொறுப்பு. ஆனால், இன்றைய அரசியல்வாதிகள் மக்களைச் சுரண்டிச் செழித்து வாழ்கின்றனர். அதனால்தான் மக்கள் அடிப்படைத் தேவைகள் கடன் கிடைக்காத நிலையில் காணப்படுகின்றனர்.

***மனித ருணவை மனிதர் பறிக்கும்***
***வழக்கம் இனியுண்டோ?***
***மனிதர் நோக மனிதர் பார்க்கும்***
***வாழ்க்கை இனியுண்டோ?***

***(பாரதி. கவி. ப.40)***

என்று சுப்பிரமணிய பாரதியார் வினவுகிறார். மக்களுக்குத் தேவையான உணவைப் பதுக்கி வைப்பதால்தான் உணவுப் பொருள் தட்டுப்பாடு வருகிறது. ஆதலால் சந்தையில் பொருள்களின் விலை உயர்கிறது. விலை உயர்வால் பொருள்களை வாங்க முடியாத குறைந்த கூலி பெறும் ஏழைகள் தவிக்கின்றனர். இதன் விளைவாகப் பட்டினி நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். இதன் தொடர்ச்சியே வறுமை நிலை எனலாம்.

**வறுமை ஒழிவதற்கே வழி**

வைரமுத்து உழைப்பாளர்கள் புரட்சி செய்து வறுமையை விரட்ட வேண்டும் என்கிறார்.

***ஒரு வேளை***
***தீப்பந்தம் கொளுத்தினால் தான்***
***ஏழையின் அடுப்பு***
***இனி எரியுமோ***

***(தி.எ.தீ.ப. 55)***

***கழுகுகளுக்கு கூடு கட்டினீர்களே***
***இனியாவதொரு நாள் . . . .***
***அக்கினி முட்டைகள் இடுங்களேன்***

***(தி.எ.தீ.ப. 56)***

என்ற கவிதை வரிகள் வைரமுத்துவின் புரட்சிக்கருத்தைச் சுட்டி நிற்கின்றன எனக் கூறலாம்.

**கல்வி**

அறியாமையைப் போக்கும் கருவியாக விளங்குவது கல்வியாகும்.

***கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு***
***மாடல்ல மற்ற யவை***

***(கு.எ. 400)***

என்று திருக்குறள் கல்வியே செல்வம் என்றும், மற்ற எப்பொருளும் செல்வமல்ல என்றும் குறிப்பிடுகிறது.

கல்வி மனிதனுடைய உள்ணர்ச்சியையும், அறிவுக் கூர்மையையும் விளக்கமுறைச் செய்து தன் அழகு. நலம், நன்மை, வாய்மை முதலியவற்றைச் சிந்திக்கத் தூண் டுகிறதுசுசு (மு. மேத்தா கவிதைகளில் சமுதாயப் பார்வை-ப.119-120) என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகின்றார்.

பாடநூல்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டன. இதன் காரணமாக மாணவர்களுக்கு கல்வி இனிமையைத் தரவில்லை. இக்கருத்தினை,

**பள்ளி செல்லும் சிறுவன்**
**ஒவ்வொரு விடியலிலும்**
**தான்**
**நாடு கடத்தப்படுவதாய்**
**நசிந்து போகிறான்**

***(இ.தே. கீ. - ப.87)***

என்ற கவிதை வரிகளில் காண முடிகிறது. மற்றொரு கவிதையில் இன்றைய பாடத் திட்டத்தினை,

**பிள்ளைகளுக்குப் புரியாத**
**பிள்ளைத்தமிழ் மாதிரி**
**பாடத்திட்டமே உன்னை**
**பயமுறுத்தும் போது**

**ஒய்ந்து கிடக்க**
**உனக்கேது நேரம்?**

***(இ. தே. கீ.ப. 130)***

என்று குறிப்பிடுகிறார்.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

தற்கால இளைஞர்கள் மத்தியில் நீறு புத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பது வேலையில்லாத திண்டாட்டம் ஆகும்.

***மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஊட்டி***
***வளர்க்கப்படும் சேயாகவும், பொருளாதார***
***நிபுணர்களின் திறமைக்கு***
***ஒரு சோதனையாகவும், அரசியல்வாதித்***
***திட்டங்களுக்கெல்லாம் ஓர் அறை***
***கூவலாகவும் விளங்கி வரும் இது,***
***தற்காலப் படைப்பாளர்களின் கவனத்தைக்***
***கவர்ந்துள்ள பிரச்சினைகளுள்***
***ஒன்று"***

***(வாணிதாசன் கவிதைகள் ஓர் ஆய்வு-ப.186)***

என்று மு.பி. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

வைரமுத்துவின் அவனுக்கே அவன் அந்நியமானால், என்ற கவிதையில் இந்தப் பல்கலைக் கழகங்கள் வேலையில்லாதவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளா? என்று வினவுகிறார். மேலும்,

***சிகரெட் நுனியில் தெரியும்***
***நெருப்பைத் தவிர***
***வேறேதும் வாழ்க்கையில்***
***வெளிச்சமில்லை***

***(இ.தே.சீ.ப. 91)***

என்று வேலையில்லா இளைஞர்களின் நிலையினைக் குறிப்பிடுகின்றார்.

**குழந்தைத் தொழிலாளர்கள்**

இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள். இத்தகையை குழந்தைகள் நலனே எதிர்கால நலனாகும். இதையுணர்ந்தே முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தாம் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுமாறு வேண்டிக் கொண்டார். ஆனால், இன்று பெரும்பான்மையான குழந்தைகள் பொருளாதாரக் குறைவு காரணமாகக் கல்வி பயிலாமல் வேலைக்குச் செல்கின்றனர். இத்தகைய குழந்தைத் தொழிலாளர்கள் நிலையை, "இரும்படிக்கும் ரோஜாக்கள்" என்ற தலைப்பின் கீழ் அமைந்த,

***"நேரு பெருமானே***
***குழந்தைகள் தினம்***
***கொண்டாட வேண்டும்***
***கூப்பிடுங்கள்***
***குழந்தைகளை***
***அங்கங்கே தேசமெங்கும்***
***இரும்படிக்கும் ரோஜாக்களை..."***
***பொதி சுமக்கும் புக்களை***
***தாய்ப்பாலுக்கும் சம்பளம் கட்டச்***
***சம்பாதிக்கும் சிசுக்களை***
***சிலுவையில் அறையப்பட்ட***
***சின்னச் சின்ன ஏசுகளை***
***கூப்பிடுங்கள் நேருஜி***

***(இ.பு.வி.-ப.115)***

என்னும் கவிதையில் வைரமுத்து குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையை எடுத்துரைக்கிறார்.

**தொகுப்புரை**

இன்றைய சமுதாயச் சிக்கல்களான சாதி, போலித்துறவறம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், குழந்தைத் தொழிலாளர்களின் நிலை என சமுதாயத்தினைப் பாதிக்கின்ற நிகழ்வுகளை இச்சமூகம் திருந்தி விடட்டும் என்ற நினைப்பினில் தம் புதுக்கவிதைகளில் மிகவும் அழகாக கவிஞர் வைரமுத்து பதிவு செய்துள்ள விதத்தினை இவ்வாய்வுக் கட்டுரை வழி அறிய முடிகின்றது.